த. நா.ச.பே. எண்:29 நாள்:09.09.2021

**(உறுப்பினர்கள் திரு. நயினார் நாகேந்திரன் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோரது பேச்சுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதில்)**

**மாண்புமிகு முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள், வழக்குகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, அவற்றிலிருந்து விடுதலை பெற, அவற்றைத் திரும்பப் பெற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். ஏற்கெனவே இதே மன்றத்திலே நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். பல உறுப்பினர்களும் அதுகுறித்துப் பேசியிருக்கிறீர்கள். ஏற்கெனவே, பல கட்டங்களில் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டு, அப்போது போடப்பட்ட வழக்குகளெல்லாம் திரும்பப் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில வழக்கினுடைய தன்மையைப் பொறுத்தவரையிலே, அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, பல சட்ட சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. அதுகுறித்து ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், எப்படியும், முடிந்தவரையில் எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் திரு. மணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசுகிறபோது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படக்கூடிய ஒய்வூதியத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே 20 ஆயிரம் ரூபாயிலிருந்து, 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், உயர்த்தப்பட்டது வெறும் அறிவிப்போடு நின்று விட்டது. அந்த அறிவிப்புதான் இன்றுவரையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு முறைப்படி சட்டமன்றத்திலே சட்டமுன்வடிவு கொண்டு வந்து நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால், அதை நிறைவேற்றவில்லை. கடந்த ஆட்சி அதைச் செய்யவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சி அமைந்ததற்குப்பிறகு, - இன்னும் ஒரு நாள்தான் சட்டமன்றம் நடைபெறவிருக்கிறது. திங்கட்கிழமையுடன் அவைக் கூட்டம் முடியவிருக்கிறது. திங்கட்கிழமை அன்று, 25 ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கிடும் வகையில், சட்டமுன்வடிவினை இந்த அவையிலே கொண்டுவந்து, நிறைவேற்றித் தரப் போகிறோம் என்ற செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

****

**(எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி உரையின்போது முதலமைச்சர் குறுக்கிட்டு பதிலளித்தவை)**

**மாண்புமிகு முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முழுமையாகப் பேசி, அதை நான் முழுமையாகக் குறிப்பெடுத்துக் கொண்டு, பதிலுரை ஆற்றுகிறபோது, அவற்றிற்கெல்லாம் விளக்கமாக நான் பதில் சொல்லப் போகிறேன். இருந்தாலும், நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி குறித்தும் சொன்னார். நாங்கள் ஒரு முறை அல்ல – பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தோம். 10 ஆண்டு காலமாக ஆட்சியில் இருந்த நீங்கள், அதைச் செய்யவில்லை. ஆனால், தேர்தல் அறிக்கையிலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். சட்டமன்றக் கூட்டத் தொடர் கலைவாணர் அரங்கத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், அந்த முயற்சியிலே இன்றைக்கு இறங்க முடியவில்லை. நிச்சயமாக, உறுதியாக சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்றத்தில் கூட்டத் தொடர் நடைபெறுகிறபோது, நிச்சயமாக நேரடியாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவோம்.

அதேபோல, தொடக்கத்திலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, உங்கள் சொந்த இல்லத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, நாங்கள் கொண்டு வந்து நிறைவேற்றினோம்; அதைத் தொடர வேண்டும் என்றும் எடுத்து

வைத்தார். ஆனால், உண்மை நிலை என்னவென்று கேட்டால், எங்களிடம் கேட்பதைவிட, காவல் துறை அதிகாரிகளிடம் கேட்டால் தெரியும், அதன் இலட்சணம் என்னவென்று. இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் தரமற்றவையாக இருக்கின்றன. போதிய அடிப்படை வசதிகள் இல்லை. விண்ணப்பங்கள் செய்தும், முன்பணம் செலுத்தியும், வெகுநாட்களாக காத்திருக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அதில் விண்ணப்பித்தவர்கள் பல பேர் ஓய்வு பெற்றுச் சென்று விட்டார்கள். இதுதான் இருக்கக்கூடிய சூழ்நிலை. ஆனாலும், இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், நீங்கள் கொண்டு வந்த திட்டம் என்பதற்காக நாங்கள் கைவிட மாட்டோம். அதை இன்னும் சிறப்பாக, காவலர்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9